# இலங்கை கொவிட் – 19 இனை எதிர்கொள்வதில் அமெரிக்காவின் உதவிகள்

கொவிட் -19 பெருந்தொற்றின் ஆரம்பம் முதலே அதனை எதிர்கொள்வதில் ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் மிக நெருக்கமாகப் பணியாற்றியுள்ளன. **அமெரிக்க மக்கள் இதுவரை அண்ணளவாக 2.4 மில்லியன் கொவிட்-19 தடுப்பூசி மருந்தளவுகளை நன்கொடையாக வழங்கியுள்ளனர். அமெரிக்கா, USAID ஊடாக, இலங்கையின் கொவிட் -19 இற்கான பதிலளிப்பு மற்றும் மீண்டெழும் செயற்பாடுகளுக்காக, இலகுவில் காவிச்செல்லக்கூடிய 200 செயற்கை சுவாசக் கருவிகளின் நன்கொடை உட்பட 17.9 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.** உயிர்காக்கும் சிகிச்சைகளை வழங்குதல், மருத்துவ பராமரிப்பினை வலுப்படுத்துதல் மற்றும் அவசர விநியோகங்களை அணிதிரட்டுதல் ஆகிய நோய்க்கடத்துகையினைக் குறைப்பதற்கும், பதிலளிப்பினை மேலும் அதிகரிப்பதற்கும் நாடு மீண்டெழுவதற்கு உதவுவதற்குமான இந்த உதவிகள் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் மற்றும் 9 மாகாணங்களிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களைச் சென்றடைந்துள்ளன. இந்த உதவிகள் அனைத்தும் மானியங்களாக (நன்கொடைகளாக) வழங்கப்பட்டனவே அன்றி கடன்களாக அல்ல. இந்த பங்காண்மையின் மூலம் ஐக்கிய அமெரிக்காவானது:

- இலங்கைக்கு 1.5 மில்லியன் மொடர்னா மற்றும் 900,000 பைசர் (Pfizer) தடுப்பூசி மருந்தளவுகள் உட்பட அண்ணளவாக 2.4 மில்லியன் தடுப்பூசிகளை COVAX ஊடாக வழங்கியுள்ளது. உலகளாவிய ரீதியில், உயர்தரமுடைய உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட COVID-19 தடுப்பூசிகளுக்கான சமமான அணுகலை வழங்குவதற்கான உலகளாவிய முயற்சிக்கு உதவிசெய்யும் உலகின் மிகப்பெரிய ஒற்றை நன்கொடையாளரான ஐக்கிய அமெரிக்கா, உலகளாவிய COVAX தடுப்பூசி முன்முயற்சிக்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.
- நோயாளிகள் மற்றும் இலங்கையின் சுகாதாரப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்காக 240,000 KN95 முகக்கவசங்களைக் கொண்ட தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட, 40,000 பாதுகாப்புக்

கண்ணாடிகள் மற்றும் 600,000 சோடி பரிசோதனைக் கையுறைகள் ஆகிய சுகாதார அமைச்சிற்கு அவசரமாகத் தேவையான பொருட்களை வழங்கியது. அதிக வைத்திய பராமரிப்பு அவசியமா என்பதைத் தீர்மானிப்பதற்காக, நோயாளியின் இரத்தத்தில் ஒட்சிசன் அளவை அளவிடுவதற்காக 1,200 விரல் நுனி நாடித்துடிப்பு ஒக்சிமீட்டர்கள் மற்றும் கொவிட் -19 வைரஸ் காணப்படுவதை நேரடியாகக் கண்டறிவதற்காக 500,000 விரைவான நோய் கண்டறியும் பரிசோதனைக் கருவிகள் உள்ளிட்ட பரிசோதனைக் கருவிகளையும் நன்கொடையாக அளித்துள்ளோம்.

- COVID-19 இன் மிகக் கடுமையான அறிகுறிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உயிர்களைக் காப்பதற்கும் 121 இலங்கையின் சுகாதாரபராமரிப்பு நிலையங்களுக்கு 200 செயற்கை சுவாசக் கருவிகளை நன்கொடையாக வழங்கியது. இவ்வகையான செயற்கை சுவாசக் கருவி மாதிரிகளைப் பயன்படுத்துவதற்கும், COVID பாதிப்புகளை முகாமை செய்வதற்கும் தகுதியுள்ள சுகாதார நிபுணர் குழாமினை விரிவுபடுத்துவதற்காக 1,400 இற்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியினை அளித்தது.

- பெருந்தொற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கையில் ஒட்சிசன் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்தவும், கொவிட்-19 சிகிச்சை நிலையங்களில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அவசரமாகத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்யவும், பைசர் (Pfizer) தடுப்பூசி வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக அதிதீவிர குளிர்ச்சியான சேமிப்பு வசதிகளை நிறுவுவதற்கும், சுகாதாரப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் உடல் மற்றும் மனச் சோர்வு மற்றும் மனநலப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் ஓகஸ்ட் 2021 இல் சுகாதார அமைச்சுடன் இணைந்து பணியாற்றியது.

- வட மாகாணத்தின் ஆறு மாவட்டங்களில் தடுப்பூசியேற்றும் நிலையங்களில் தடுப்பூசியேற்றல் முயற்சிகளுக்கு உதவுவதற்காக 180 இளம் தன்னார்வலர்களுக்குப் பயிற்சியளிக்க இலங்கை செஞ்சிலுவை சங்கத்திற்கு உதவி செய்தது.

- நூற்றுக்கணக்கான மருத்துவமனைகள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் சமூகங்களுக்கு தனிநபர் பாதுகாப்பு

உபகரணங்கள், உடல் வெப்பநிலையினை அளவிடும் கருவிகள், கை கழுவும் கருவிகள், சுகாதார அங்கிகள், தொற்றுநீக்கித் தெளிப்பான்கள், N95 முகக்கவசங்கள் மற்றும் பிற முக்கியமான பொருட்களை வழங்குவதன் மூலம் முன்களப் பணியாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவியது. தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை தயாரிக்க உள்ளூர் வர்த்தகங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பயிற்சியினை அளித்தது.

- பாடசாலைகளுக்கு கை கழுவும் கருவிகள், கைத்தொற்றுநீக்கிகள் மற்றும் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் மீளத்திறப்பதற்கான வழிகாட்டுதல்களை அச்சிட்டு விநியோகித்ததன் ஊடாக, முதல் இரு கொவிட்-19 அலைகளுக்குப் பின்னர் பாடசாலைகளைப் பாதுகாப்பாக மீளத் திறக்க உதவியது. COVID-19 க்கு எதிரான அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கும், தேவையேற்படின் மாணவர்களைத் தனிமைப்படுத்தவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய பராமரிப்பை மேற்கொள்வதற்கும் நாடாளாவிய ரீதியில் 120 பாடசாலைகளில் படுக்கைகள், மெத்தைகள், முதலுதவி உபகரணங்கள், இலகுவில் காவிச்செல்லக்கூடிய திரைகள் மற்றும் நீர் விநியோகிக்கும் கருவிகளைக் கொண்ட சுகாதார அறைகள் நிறுவப்பட்டன. 14 மாவட்டங்களில் 200 க்கும் மேற்பட்ட அரச பாடசாலை வளாகங்கள் மற்றும் முன்பள்ளிகளைத் தொற்றுநீக்கம் செய்ததுடன், 150,000இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வலிமையான தெளிப்பான்கள் மற்றும் உடல் வெப்பநிலையினை அளவிடும் கருவிகளையும் வழங்கியது.
- சமூக இடைவெளியினை ஊக்குவிக்கும், நல்ல சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கும், மற்றும் வைரஸ், அதன் அறிகுறிகள், பரவல் மற்றும் தடுப்பு முறைகள் தொடர்பாக, 7 மில்லியனுக்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்த ஒரு தேசிய செய்திப் பிரச்சாரத்தை ஆரம்பித்தமை.
- COVID தொடர்பான பாடசாலை மூடல்கள் காரணமாக வீட்டிலேயே இருக்கும்போது தமது வாழ்க்கை மற்றும் தொழில் திறன்களை முன்கூட்டியே வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புகளை இளைஞர்களுக்கு வழங்குவதற்காக திரைப்படங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் இணையவழிக் கற்றல் வாசலொன்று

ஆகியவற்றின் ஊடாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான இளைஞர்களைச் சென்றடைந்த "வீட்டில் இருந்து கற்றுக்கொள்ளுங்கள்" எனும் பிரச்சாரத்தை உருவாக்கியது.

- COVID-19 தொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண்களுக்காக ஆறு தனிமைப்படுத்தல் மகப்பேற்றுப் பிரிவுகளை நிறுவியது. தனிமைப்படுத்தல் மையங்கள், விடுதிப்பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சுகாதார வசதிகளுக்கான அணுகல்கள் அற்ற கட்டுப்படுத்தப்பட்ட பிற இடங்களில் உள்ள பெண்களுக்கு தூய்மைப்பட்டிகள் (Sanitary Pads) உட்பட 7,000 இற்கும் மேற்பட்ட தனிநபர் சுகாதார உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டது.
- COVID-19 காரணமாக வீட்டு வன்முறை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட, அழைப்பாளர்களுக்கு உளவியல் ஆலோசனையை வழங்கவும் மற்றும் உணவு மற்றும் பாதுகாப்பான தங்குமிடம் போன்ற அவசர சேவைகளுடன் அவர்களை இணைப்பதற்கு 24 மணிநேர நேரடித்தொலைபேசி அழைப்புத் திறனை விரிவுபடுத்தியது.
- நாளொன்றிற்கு மேற்கொள்ளப்படும் PCR பரிசோதனைகளை 60 இலிருந்து 180 வரை அதிகரிப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு PCR பரிசோதனை இயந்திரமொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மொனராகலயில் உள்ள பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு நாளாந்தம் 100 பேரை பரிசீலனை செய்வதற்காக நடமாடும் பரிசோதனை ஆய்வுகூடமொன்று வழங்கப்பட்டது. RT-PCR இயந்திரம், 2,000 பரிசோதனைகளை நடத்துவதற்கான பொருட்கள் மற்றும் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட ஐக்கிய அமெரிக்க நிதியுதவியுடனான கொவிட்-19 பரிசோதனை உபகரணங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டன.
- குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீதான நெருக்கடியின் தாக்கத்தைத் தணிப்பதற்கு பதிலளிப்பு நடவடிக்கைகள் மற்றும் துறைசார்ந்த உத்திகளை அறிவிப்பதற்காக வீடுகள், சுகாதாரம், கல்வி மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றிலான கொவிட்-19 இன் தாக்கம் குறித்த தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வுகளுக்கு உதவியமை. ஏற்றுமதியாளர்கள் மீதான கொவிட்-19 இன் வர்த்தக மற்றும் தொழிலாளர்சந்தைத் தாக்கங்கள் குறித்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஐக்கிய அமெரிக்க

சந்தையை அணுகுவதில் புதிய ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்காக ஆடைக்கைத்தொழில் துறை மற்றும் இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச்சபையுடனான இராஜாங்கத் திணைக்களத்தின் தனியார் துறை ஈடுபாட்டின் ஒரு அங்கமாக திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது.

- 71,000 முகக்கவசங்கள், 24,000 நைட்ரைல் கையுறைகள், தலைப்போர்வைகளுடன் கூடிய 600 தனிமைப்படுத்தல் அங்கிகள், 60 அகச்சிவப்பு வெப்பமானிகள், 50 இலகுவில் காவிச்செல்லக்கூடிய ஒட்சிசன் செறிவூட்டிகள் மற்றும் தொற்றுநீக்கிகள் மற்றும் பாதுகாப்புக் கண்ணாடிகள் போன்ற அவற்றின் செயல்பாட்டிற்கு உதவிசெய்யும் உபகரணங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்களை வழங்குவதன் மூலம் பொது சுகாதார அவசரநிலைகளுக்கு பதிலளிப்பதற்கான இலங்கையின் தயார்நிலையை வலுப்படுத்தியது. ஐக்கிய அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் இந்த நன்கொடைகளுக்கு நிதியளித்ததுடன் இலங்கையின் உள்ளூர் வணிகங்கள் கொவிட்-19 இன் பொருளாதார தாக்கத்திலிருந்து மீண்டுவருகையில் அவற்றிற்கு உதவியளிக்கும் ஐக்கிய அமெரிக்காவின் முயற்சிகளுக்கு ஏற்ப இப்பொருட்கள் அனைத்தும் உள்நாட்டிலேயே கொள்வனவு செய்யப்பட்டன.